Life of Christ
Tamil



# கிறிஸ்துவின் ஜீவியத்தில் முக்கியமானவை

## 6 உயிர்த்தெழுந்த இயேசு

- இயேசு அடக்கம் பண்ணப்படுதல்
- இயேசு உயிர்த்தெழுதல்
- இயேசு தமது திட்டத்தைத் தெரிவித்தல்
- இயேசு பரலோகம் செல்லுதல்
- இயேசு தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றல்

## இயேசு அடக்கம் பண்ணப்படுதல்

இயேசுவை விசுவாசித்த நிக்கோதேமுவும் அரிமத்திய ஊரானாகிய யோசேப்பும் இயேசுவை அடக்கம்பண்ண பிலாத்துவினிடம் உத்தரவு பெற்றனர். அவர் மரித்தார் என்பதை நிச்சயித்துக் கொள்ளும்படி ஓர் சேவகன் ஈட்டியால் அவர் விலாவில் குத்தி, மரித்தார் என்று கண்டனர். அவரது சரீரத்தைப் புதுத் துணிகளில் சுற்றி, புதிய கல்லறையிலே அடக்கம்பண்ணி, ஓர் பெரிய கல்லால் அதன் வாசலை அடைத்து விட்டனர். இயேசு சிலுவையிலறையப்பட்டு ''உயர்த்தப்படவேண்டும்'' என்று இயேசு கூறியது நிக்கோதேமுவுக்கு ஞாபகமிருந்தது.

''அவரை விசுவாசிப்பவர்கள் யாவரும் நித்திய ஜீவனைப் பெறும்படி மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியது அவசியம். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:14-16.

''நான் மரித்தபின் மூன்று நாட்களில் எழுந்திருப்பேன்'' என்று இயேசு கூறியது அவருடைய எதிரிகளுக்கு ஞாபகமிருந்தது. ஆகவே யாராகிலும் இயேசுவின் சரீரத்தை திருடிவிட்டு அவர் உயிர்த்தெழுந்தார் என்று கூறாதபடி அவர்கள் பிலாத்துவின் உதவியுடன் கல்லறையைப் பாதுகாக்கும்படி போர்ச் சேவகர்களை அனுப்பினார்கள்.

### நீர் செய்ய வேண்டியது.

1. யார் இயேசுவை அடக்கம்பண்ணினார்கள்?

   1) .................... 2) .................

2. இயேசு எவ்வளவு நாட்களின் பின் தான் உயிர்த்தெழுவேன் என்று சொன்னார்?...

யோவான் 3:14-16 இல் இயேசு நிக்கோதேமுவுக்குக் கூறியதை மனப்பாடம் செய்க.

© 1983. All Rights Reserved
International Correspondence Institute
Brussels, Belgium
D/1985/2145/15

## இயேசு உயிர்த்தெழுதல்

இயேசு சிலுவையில் அறையப்பட்டபின் மூன்-றும் நாளாகிய ஞாயிறு காலை உயிர்த்தெழுந்தார்.

ஞாயிறு அதிகாலை மகதலேனா மரியாளும், மற்றய மரியாளும் கல்லறைக்குச் சென்றனர். சடுதியாக ஓர் பூமியதிர்ச்சியேற்பட்டது. ஓர் தேவதூதன் வந்து கல்லறையை மூடியிருந்த கல்லைப்புரட்டி அதன் மீது உட்கார்ந்தான். போர்சேவகர்கள் பயத்தினால் மரித்தவர்கள் போலானார்கள்.



தேவதூதன் ஸ்திரிகளை நோக்கி "பயப்படாதிருங்கள், நீங்கள் சிலுவையில் மரித்த இயேசு-வைத் தேடுகிறீர்கள் என்றறி-வேன். அவர் இங்கேயில்லை. அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். அவரை வைத்த இடத்தை வந்து பாரு-ங்கள். சீக்கிரமாய் அவர் உயிர்த்தெழுந்ததை அவர் சீஷருக்கு அறிவியுங்-கள்," என்றான். அவர்கள் சீஷரிடத்தில் சொல்ல ஓடினார்கள். சடுதியாக இயேசு அவர்களுக்குக் காணப்பட்டு, "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்றார். அவர்கள் கிட்டவந்து அவர் பாதங்களைத் தழுவி அவ-ரைப் பணிந்து கொண்டார்கள்."
மத்தேயு 28:1-9.

இயேசு அன்று தம்மை சீஷருக்கு ஐந்து தடவை காண்பித்தார். அவர் மகிமையடைந்த சரீரத்தை உடையவராய் இருந்ததினால் கதவுகள் பூட்டியிருந்த வேளை உட்பிரவேசிக்கவும், வெளிவரவும் கூடிய வராய் இருந்தார்.

வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: "உங்களுக்குச் சமாதானம்" என்றார்.
யோவான் 20:19.

ஆரம்பத்தில் சீஷர் இயேசுவை ஓர் ஆவியென்று நினைத்தனர். பின்பு அவரைத்தொட்டு, அவரோடு பந்தியிருந்த பின் உண்மையாகவே அவர் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்தனர். அவரது சீஷர்களில் ஒருவனான தோமா அவர்களுடன் இருக்கவில்லை. எனவே அவர்கள் கூறியதை அவன் நம்பவில்லை. அடுத்தவாரம் அவர்கள் யாவரும் ஒருமித்திருக்கையில் இயேசு திடீரென அவர்கள் மத்தியில்

தரிசனமானார். இயேசு தோமாவை நோக்கி ''எனது கரங்களைத் தொட்டுப்பார்'' என்றும், ''என் விலாவில் உன் கரத்தைப் போட்டுப் பார்'' என்றும் கூறினார். ''அவிசுவாசியாயிராமல், விசுவாசி'' என்றார். அப்பொழுது தோமா அவரை நோக்கி ''என் ஆண்டவனே, என் தேவனே'' என்றான். இயேசு அவனை நோக்கி, ''நீ என்னைக் கண்டு விசுவாசித்தாய், காணாமல் இருந்தும் விசுவாசிப்பவர்கள் பாக்கியவான்கள் என்றார். யோவான் 20:27-29.



இயேசுவின் இந்த வார்த்தைகள் விசேஷமாக எமக்குரியவைகள். அவர் உண்மையில் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை நம்புவதற்கு நாம் அவரைக் காண வேண்டியதில்லை. அவர் உயிர்த்தெழுந்தபின் நாற்பது நாட்கள் சீஷர்களுக்குக் காணப்பட்டு அனேக காரியங்களைக் கற்பித்தார். இதை அவர்கள் வேதாகமத்தில் எழுதிவைத்திருக்கின்றனர். அவர்களுடைய எதிரிகள் இயேசு உயிர்த்தெழுந்தார் என்றும் அவர்களின் சாட்சியின் நிமித்தம் அவர்களை அடித்துச் சிறையிட்டனர். ஆனால் இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற சாட்சியில் மரிக்கும் வரை அவர்கள் நிலை நின்றனர். அவர்களே இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு உண்மையான சாட்சிகள்.

### நீர் செய்ய வேண்டியது

4. வாரத்தின் எந்த நாளில் இயேசு உயிர்த்தெழுந்தார் ? ..............................

5. இயேசு உயிர்த்தெழுந்தவராய் தம்மைப் பின்பற்றினவர்களுக்கு எத்தனை நாட்கள் காண்பித்தார் ? ..........................

6. தான் ஓர் சாதாரண ஆவியல்ல என்பதை நிரூபிக்க என்னென்ன அடையாளங்களைக் காண்பித்தார் ?
   (a) தான் சொன்னதை நம்புங்கள் என்றார்.
   (b) அவர்கள் தன்னைத் தொடும்படி இடங்கொடுத்து, அவர்களோடு பந்தியிருந்தார்.
   (c) அவர் அவர்களுக்கு ஒரு அறிகுறியும் கொடுக்கவில்லை.

7. தோமா இயேசுவை எப்படி அழைத்தான்?

..........................................

## இயேசு தமது திட்டத்தை தெரிவித்தல்

ஒவ்வோர் விசுவாசியும் தன்னைப்பற்றி மற்றவர்களுக்கு சாட்சி பகர வேண்டும் என்பதே அவருடைய திட்டமாயிருந்தது.

> "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். மத்தேயு 28:18-20.

பரிசுத்தாவியின் உதவியின்றி தம்மைப் பின்பற்றுபவர்கள் நிச்சயமாய்த் தமது திட்டத்தை நிறைவேற்றத் தவறுவார்கள் என்பதை இயேசு அறிந்தவராய்:



> எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றும் நாளிலே மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் ...................... நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனல் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்ருர். லூக்கா 24:46-49.

### நீர் செய்ய வேண்டியது

8. மத்தேயு 28:18-20; லூக்கா 24:46-49 ஆகிய இயேசுவின் வார்த்தைகளை ஐந்து முறை வாசிக்கவும்.

9. இயேசுவின் திட்டத்திலே அவரை விசுவாசித்தோர் யாவரும்:
   (a) ஓர் அரசியல் ராஜ்யத்தைக் கட்டும்படி.
   (b) இரட்சிப்பை மாத்திரம் அனுபவிக்க
   (c) இயேசுவின் சாட்சிகளாய் இருக்கும்படி.

10. இயேசுவின் சாட்சிகளாய் ஜீவிக்கும்படி அவரைப் பின்பற்றியவர்களுக்கு எது தேவையாயிருந்தது.
   (a) பரிசுத்தாவியின் வல்லமை.
   (b) அரசாங்க உத்தரவு.
   (c) நல்ல ஆலயக் கட்டிடங்கள்.

## இயேசு பரலோகம் செல்லுதல்

இயேசு அவர்களை நோக்கி ''பரிசுத்தாவியானவர் உங்கள் மேல் வரும் பொழுது நீங்கள் பெலனடைந்து எனக்கு எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தம் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இவ்வார்த்தைகளைச் சொன்னபின்பு அவர்கள் கண்களுக்கு முன்பாகவே அவர் வானத்தை நோக்கி எடுத்துக்கொள்ளப்பட்டு மேகத்துக்குள் மறைந்தார்.

அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: ''கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்'' என்றார்கள்.
அப்போஸ்தலர் 1:7-11.

அவர்கள் பின்பு பரிசுத்தாவிக்குக் காத்திருக்கும் எருசலேமிற்குச் சென்ற வேளையில்.



''என் பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்கள் உண்டு. ........... ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். ......... நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். யோவான் 14:2,3. என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தனர்.

### நீர் செய்ய வேண்டியது

11. இயேசு எப்படிப் பரலோகத்திற்குச் சென்றார் ?
... (a) சரீரப்பிரகாரமாய் அவர் எடுத்துக் கொள்ளப்பட்டார்.
... (b) அவர் ஓர் விமானம் மூலம் சென்றார்.
... (c) அவர் சடுதியாய் மறைந்தார்.

12. இயேசு என்ன செய்வேன் என்று வாக்களித்தார் ?
... (a) சீஷருக்குக் காத்திருப்பதாக.
... (b) பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக.
... (c) உலகத்தை ஆளுவதாக.

## இயேசு தமது வாக்குத் தத்தங்களை நிறைவேற்றல்

இயேசு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு பத்து நாட்களுக்குப் பின்பு விசுவாசிகளை பரிசுத்தாவியானவர் நிரப்பினார். அவ்வேளையிலிருந்து இயேசுவைப்பற்றி சாட்சி பகர அவர்கள் வல்லமை பெற்றனர். அவர்கள் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் போடப்பட்ட வேளைகளிலும் இயேசுவைக் குறித்து சாட்சி கூறினர். அவர்கள் தங்கள் ஜீவனைப் பாதுகாத்துக்கொள்ளும்படி எருசலேமிலிருந்து எங்கும் ஓடினர். சென்ற, சென்ற இடங்களிளெல்லாம் அவர்கள் சாட்சி கொடுத்தனர். இயேசு தம் வாக்கை நிறைவேற்றி இன்னும் விசுவாசிகளைப் பரிசுத்தாவியானவரால் நிரப்பித் தமது சாட்சிகளாய்மாற்றுகிறார். அவர் தமது வாக்கின்படியே மீண்டும் வருவார். அவர் சீக்கிரமாய் வருவார் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

> ''ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.
> 1 தெசலோனிக்கேயர் 4:16,17.

இன்று இயேசு வந்தால் அவரைச் சந்திக்க நீ ஆயத்தமா? விரும்பினால், பின்வரும் ஜெபத்தைச் சொல்லவும்.

ஜெபம்: இயேசுவே உம்மை என் இரட்சகரும், கர்த்தருமாய் ஏற்றுக்கொள்கிறேன். என் பாவங்களை மன்னியும். உமது பரிசுத்தாவியானவரால் என்னை நிரப்பும். உம்மைப்பற்றி மற்றவர்களுக்குச் சொல்ல எனக்கு உதவி செய்யும். நான் மரித்தாலும், ஜீவித்தாலும் நீர் வரும் வேளை நித்தியமாய் பரலோகத்தில் நான் ஜீவிக்க என்னைச் சேர்த்துக் கொள்ளும்.

உமது பெயர்: ..........................

### நீர் செய்ய வேண்டியது

13. 1 தெசலோனிக்கேயர் 4:16,17ஐ ஐந்து முறை வாசிக்கவும். இயேசுவின் வருகைக்கு நீர் ஆயத்தமா? ..........................

## குறிப்புகள்

இப்பாடங்கள் எவ்விதத்தில் உமக்கு உதவியாயிருந்தன ?

.........................................................................

.........................................................................

.........................................................................

.........................................................................

## வாழ்த்துக்கள்

''கிறிஸ்துவின் ஜீவியத்தில் முக்கியமானவை'' என்னும் பாடத்திட்டத்தை நீர் முடித்துவிட்டீர். உம்மை எமது மாணவராகப் பெற்றது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். சர்வதேச அஞ்சல் வழிக்கல்வி நிலையம் மூலம் இன்னும் பாடங்களை நீர் படிப்பீர் என்று எதிர்பார்க்கிறோம். நீர் படித்தவற்றை கிரியையில் போடுகின்ற வேளையிலும் தேவன் உம்மை ஆசிர்வதிப்பாராக. உமது ஆறு பாகங்களினதும் புள்ளிகளை அவதானித்து உமக்கு உடனடியாக ஓர் சான்றிதழை அனுப்பிவைப்போம்.

உமது பெயர் ..............................

விலாசம் ..............................

..............................

வயது ..............................

சமயம் ..............................

ICI Nearest Centre
ICI UNIVERSITY
1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS MOUNT, CHENNAI - 600016
PHONE : +91-44-4351 9774
Email : iciuniversitymdrs@gmail.com